சுருக்கம்

பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆங்கில வழிக் கல்வி - தமிழ் மொழி வகுப்புகளை மூடுவதற்கு பிறப்பிக்கப்பட்ட ஆணையினை இரத்து செய்து மீண்டும் தமிழ் பயிற்று மொழி வகுப்பு துவங்க அனுமதித்து – ஆணையிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (எக்ஸ்.2)துறை

அரசாணை (2டி) எண்.22 நாள்: 1.6.2006

படிக்கப்பட்டது

1. அரசு கடித எண்.44815/யு2/97-6 (ம) 7, நாள் 27.7.98 (ம) 23.11.98
2. அரசாணை (2டி) எண்.56, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12.9.2002

படிக்கவும்

சென்னை உயர்நீதிமன்ற நீதி பேராணை வழக்கு எண்.14153/2003-ன் இடைக்கால தீர்ப்புரை நாள் 11.4.2003 மற்றும் ஏனைய வழக்குகள், தீர்ப்புரைகள்

***

ஆணை:

அரசாணை (2டி) எண்.56, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12.9.2002-ல் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கில பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையான தமிழ் பயிற்று மொழி வகுப்புகள் நடத்துப்பட்டு வருவதை மூடவும், தமிழ் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க அனுமதி மறுக்கவும் ஆணையிடப்பட்டது. இச்சூழ்நிலையில், தமிழ்வழி□க் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், அரசாணை 2டி எண்.56, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12.9.2002-ஐ இரத்து செய்து, ஏற்கனவே 1998-1999-ம் ஆண்டில் இருந்த நிலைப்படி, மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையாக தமிழ் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க மீண்டும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்